# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர் : தங்கவேல் நாள் : 14.11.2022

வா.சா.1 – 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

3, 4 பிரதிவாதிகளுக்குரிய நிலங்கள் கல்லாங்காட்டு தோட்டத்தில் உள்ளது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. 3, 4 பிரதிவாதிகள் எங்கு உள்ளார்கள் என்றால், புளியம்பட்டியில் உள்ளார்கள். புளியம்பட்டியில் குறிப்பாக எந்த இடத்தில் உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. 3, 4 பிரதிவாதிகள் கல்லாங்காட்டில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றாலும், அதை ஒப்புக்கொண்டால் மேலும் கேள்விகள் எழக்கூடும் என்பதால், தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்திற்கு தென்புற ஓரத்தில் கிழமேலாக பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால், சரியல்ல. கிழமேல் பஞ்சாயத்து ரோட்டிற்கு சற்று தூரத்தில்தான் 3, 4 பிரதிவாதிகளுக்குரிய கல்லாங்காட்டுதோட்டம் உள்ளது என்று சொன்னால், சரியல்ல. நாச்சிமுத்துவை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால், சுமார் 4, 5 வருடங்களாக தெரியும். நான் அசல் வழக்கை 2014ம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். வழக்குரையில் நாச்சிமுத்து மற்றும் விஜயா ஆகியோர்களின் விலாசத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால், சரிதான். நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள கதவிலக்க எண் 1/178, புளியம்பட்டி என்று கூறியுள்ளது எங்குள்ளது என்று சொன்னால், அது ஞாபகமில்லை. நான் குறிப்பிட்டுள்ள கதவிலக்க எண் 1/178ல்தான் நாச்சிமுத்து மற்றும் விஜயா ஆகியோர்கள் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நாச்சிமுத்து எனக்கு உறவினர் என்று சொன்னால், சரியல்ல. உறவுக்காரர் என்று சொன்னால் உண்மையான விலாசம் தெரிந்துவிடும் என்பதால், அதனை மறுத்து பதில் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. கல்லாங்காட்டுதோட்டத்திலிருந்து நாச்சிமுத்து மற்றும் விஜயா ஆகியோர்கள் கிழமேலாக செல்லும் பஞ்சாயத்து ரோட்டின் அடியில் பைப்லைன் அமைத்து விஜயா கிரையம் வாங்கிய நிலத்திற்கு தண்ணீர் எடுத்து சென்றார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நாச்சிமுத்து மற்றும் விஜயா கடந்த 8.03.2002ம் ஆண்டே 2ம் பிரதிவாதி கந்தசாமி பெயரிலேயே அரசாங்கத்திடமிருந்து உரிமை பெற்று

தண்ணீர் குழாய் பதித்து கிரைய சொத்திற்கு நீர்பாசனம் செய்து வந்தார்கள் என்ற விபரம் தெரிந்தே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இன்றைய தேதியிலும் பூமிக்கடியில் தண்ணீர் குழாய் உள்ளதென்றால், சரியல்ல. அதனை நீதிமன்ற ஆணையரை கொண்டு பார்வையிட ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 ஏக்கர் 75 செண்டில் 3 ல் 1 பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அது 90 செண்ட் இடம் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. 2 ஏக்கர் 75 செண்டில் 3 ல் 1 பங்கு சொத்தானது வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் வாங்கிய 3 நபர்களுக்கும் சொந்தமானது என்று சொன்னால், சரியல்ல. அந்த 3 நபர்களும் எழுத்துமூலமான பாக கறார் பத்திரம் மூலம் பிரித்துக் கொண்டார்களா என்றால், அனுபவத்தின் அடிப்படையில் ஓட்டி வருகிறார்கள். வா.சா.ஆ.1 ஆவணப்படி 3 நபர்களுக்கு சொத்தானது பாத்தியப்பட்டுள்ள நிலையில், மற்ற நபர்களை சேர்க்காமல் நான் மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கு நிலைக்கத்தது அல்ல என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ள சொத்தின் 3 ல் 1 பங்கு பாகம் கிரையம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். அந்த 3 ல் 1 பாகமான 1 ஏக்கர் குறித்து வழக்குரை சொத்து விபரத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள முதல் இலக்கமிட்ட சொத்தில் 3 ல் 1 பங்கு நிலமும், 2 இலக்கமிட்ட சொத்தில் 3 ல் 1 பங்கு நிலமும், சர்வே எண் 94 மட்டும்தான் உள்ளது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் சர்வே எண் 94 ல் உள்ள சொத்துக்கள்தான் அதிகமாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆவணத்தின் அடிப்படையில்தான் கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 95/5 ஆனது பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட நிலம் என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/1, 2 ல் உள்ள பூமியானது சர்வே எண் 95/5, 6, 7, 8, 9, 10,11 க்கு வடபுறமாக உள்ளது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/5 முதல் 11 வரையிலான நிலங்கள் ஒரே வரிசையில் உள்ளது என்றால், சரிதான். பிரதிவாதி விஜயா கிரையம் பெற்ற நிலம் 1 ஏக்கர் 37 செண்ட் என்றால், சரிதான். சர்வே எண் 94 ல் பல நபர்கள் வீடு கட்டியுள்ளார்கள் என்றால், சரிதான். நான் வழக்குரையில் கூறியுள்ள வழக்குமூலங்கள் தவறு என்று சொன்னால், சரியல்ல. பிரதிவாதி விஜயா கிரையம் வாங்கியுள்ள நிலத்தை நான் எவ்விதத்திலும் தடங்கல் செய்ய உரிமையில்லை என்று சொன்னால், சரியல்ல.

சர்வே எண் 95/5 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லையென்றாலும், பிரதிவாதி விஜயாவுக்கு மட்டுமே உரிமையுள்ளது என்று சொன்னால், சரியல்ல. ஈஸ்வரன், அன்பரசு, செல்லமுத்து ஆகியோர்கள் என்ன உறவுமுறை என்று சொன்னால், பக்கத்து நிலங்களான சர்வே எண் 94, 95 நிலத்துக்காரர்கள் ஆவார்கள். சர்வே எண் 95 ல் ஈஸ்வரன் என்பவருக்கு எந்தவித உரிமையும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. 4 ம் பிரதிவாதி பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படியான ஒன்று என்றாலும், அதை செல்லதக்கது அல்ல என்று கூறுவதற்கு எனக்கு எந்த முகாந்திரமும் இல்லையென்று சொன்னாலும், சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் 4 ம் பிரதிவாதியை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னர் அவருடைய பெயரில் வருவாய் ஆவணங்கள் மாறுதல் அடைந்துள்ளது என்று சொன்னால், சரிதான். அதற்கு நான் மேல்முறையீடு செய்து பின்னர் பழைய நிலைக்கே மாற்றிவிட்டார்கள். 4 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நிறுத்திவைத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு முன் பெறப்பட்ட எந்த வருவாய் ஆவணங்களும் 4 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றாலும், அதனடிப்படையில் நான் விளம்புகை பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னாலுமம, சரியல்ல. நான் சர்வே எண் 95/5 ல் ஒருபோதும் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/5 ல் 4 ம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் /தங்கவேல்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.